## கடற்கரை கவியரங்கு எண் - 629



நாள் **03-09-2023**

# மனமே கேளாய்!

தேடலும் தேவையும் வாழ்வின் ஓர் நிலையாமோ?
ஊடலும் கூடலும் அன்பின்சீர் நிலையாகும்!
பாடலும் ஆடலும் மனத்தின் ஓர் வடிவாகும்!
நாடலும் மகிழ்தலும் தேடலின் ஓர் நிறைவாகும்!

நல்லவை நாடி, நல்லவை செய்யும் மனம்தீதோ?
அல்லவை வேண்டாது நல்லவை தேடிடும் மனமே;
வல்லமைக் கொண்டு வாழ்வில் வெற்றி தரும்!
நல்லதாம் சிந்தையே வாழ்வின் ஓர் வெற்றிப்படி!

ஏற்றமும் இறக்கமும் இயல்பாய்த் தொடர,
காற்றின் வழியில் பரவும் மணமாய்ச் சூடிடவே,
போற்றுதல் தேடா செயலின் மனம் கமழும்!
தூற்றுதல் இல்லா கலனை வாழ்வு தரும்!

அன்பால் உலகை நாளும்அளவெடுப்போம்!
என்புதோல் உயிர்களைச் சேர்த்தணைப்போம்!
துன்பம் என்பது நம்முடை மனச்சுமையே!
இன்பம் என்பது நாம் காணும் மனத்தெளிவே!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
03-09-2023 (மதியம் 01-45)